2012 மார்ச் 29]

20—

திருக்குடமுழுக்கு

***5744—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, கீழக்கல்லூர் புறவேலிநாதர்-அழகாம்பிகை, கைலாசநாதர்-சிவகாமிஅம்பாள் திருக்கோயில்களைப் புனரமைத்து திருக்குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களின் இன்னல்களையெல்லாம் போக்கி, ஏழையெளிய மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டு வரும் எங்கள் அன்னையே, தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் புது வரலாறு படைத்து, இந்தியத் திருநாடே வியந்து பார்க்கின்ற அளவிற்கு சங்கரன்கோவில் இடைத் தேர்தலில் எதிர்த்தவர்களையெல்லாம் டெபாசிட் இழக்கச் செய்து, சரித்திரச் சாதனை வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கின்றவர்களுக்கும், எதிரிகளுக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கும் எங்கள் இதய தெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

திருப்பூர் நகரத்திலே சாதாரணக் குடும்பத்தில் பிறந்த என்னை கிளைக் கழகச் செயலாளராகவும், தங்களின் திருநாமத்தைத் தாங்கி நிற்கின்ற மாவட்ட அம்மா பேரவையின் இணைச் செயலாளராகவும், அண்ணா பனியன் தொழிற்சங்கத்தின் செயலாளராகவும், திருப்பூர் நகரக் கழகத்தின் செயலாளராகவும், நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிடும் நல் வாய்ப்பினையும் வழங்கி, எளிய தொண்டனாகிய எனக்கு வாக்குகளைச் சேகரித்து, வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியையும் தேடித் தந்து, இந்த மாபெரும் சபையிலே எனக்கு முகவரியும் கொடுத்து, மாவட்ட கழகச் செயலாளராகவும் நியமித்து தங்களது சீரிய தலைமையின்கீழ் பணியாற்றிட என்னை இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் அமைச்சராக்கி,

(மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த, எங்கள் குடும்பத்தின் குலதெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு திருத்திய விடையை இம்மாமன்றத்தில் சமர்பிக்கின்றேன்.

திருநெல்வேலி மாவட்டம் மற்றும் வட்டம், கோடககல்லூர் (கீழக்கல்லூர்) அருள்மிகு புறவேலிநாதர்-அருள்தரும் அழகாம்பிகை திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம் தக்காரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.7,000/- ஆகும். இந்தத் திருக்கோயிலின் திருப்பணிகளைச் செய்திட உத்தேசமாக ரூ.10.00 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு நிதி ஆதாரம் திருக்கோயிலில் இல்லை. எனவே, உபயதாரர்களை அணுகி இப்பணிகளைச் செய்திட திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உபயதாரர்கள் கிடைக்கப்பெற்றவுடன் உபயம்/பொதுமக்கள் நன்கொடை மற்றும் துறை நிதியுதவியுடன் நிதி ஆதாரத்தின் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் திருப்பணிகளைச் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

முற்பகல் 11-00

திருநெல்வேலி மாவட்டம் மற்றும் வட்டம், கீழக்கல்லூர் அருள்மிகு கைலாசநாதர்-உடனுறை சிவகாமி அம்மாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இந்தத் திருக்கோயில் நவ கைலாயங்களில் செவ்வாய் ஸ்தலமாகும். இத்திருக்கோயில் நிருவாகம் செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திருக்கோயிலினுடைய ஆண்டு வருமானம் ரூபாய் 16,414 ஆகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக நிலங்கள் ஏதும் இல்லை; உண்டியல்மூலம் வருமானம் வரப்பெறுகிறது. இத்திருக்கோயிலில் ஒருகால பூஜை நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்- விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

2012 *மார்ச் 29]*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *இத்திருக்கோயிலின் குடமுழுக்கு 17-3-2006 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் நடைபெற்றது. 12 ஆண்டுகள் முடிந்த பின்பு, ஆகம விதிகளின்படி, 2018 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் மீண்டும் நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் இந்தக் கேள்வியைப் போட்டிருக்கிறார்கள். தனது தொகுதியில் உள்ள இந்தத் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்தப்படுமா என்று கேட்டிருக்கிறார். அதற்கு மாண்புமிகு அமைச்சர் பதிலளிக்கும்போது, "இதற்கு 10 இலட்சம் ரூபாய் தேவைப்படும்; அந்த அளவிற்கு நிதி இந்தத் திருக்கோயில் வசம் இல்லை. எனவே, 10 இலட்சம் ரூபாய் வழங்கக்கூடிய உபயதாரர்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்; ஏற்பாடானவுடன் குடமுழுக்கு விழா நடைபெறும்" என்று தெரிவித்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் ஒரு முன்னாள் அமைச்சர். ஆகவே, அவர் மனது வைத்தால், நொடிப்பொழுதில் இந்த 10 இலட்சம் ரூபாய் வழங்கக்கூடிய உபயதாரர்களை அவர் ஏற்பாடு செய்ய முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் செய்வாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி தொகுதி, கீழக்கல்லூர் புறவேலிநாதர்-அழகாம்பிகை, கைலாசநாதர்-சிவகாமி அம்பாள் திருக்கோயில்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவின்படியே, நிச்சயமாக எல்லா நிதியையும் திரட்டி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பேன் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*